

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை மக்களுக்கு,காவேரிப்பட்டணம் கே.வி.எஸ்.குழுமம் சார்பில் ரூ.15 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்களையும், தி.மு.க. மாநில மாநாட்டிற்காக ரூ.10 லட்சம் நிதியை கழக இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், தி.மு.க. பிரமுகரும், தொழிலதிபருமான கே.வி.எஸ். சீனிவாசன் வழங்கினார்.




சேலத்தில் தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள மாநாட்டுக்கு திண்டிவனம் ஜெயபுரம் கவுன்சிலர் ரேகா நந்தகுமார் மாநாட்டுக்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை தனது குடும்பத்துடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் சிறப்பாகப் பணியாற்றிய தூய்மைப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள், குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பணியாளர்கள், மின்வாரிய பணியாளர்கள் ஆகிய முன்கள பணியாளர்கள் 1380 பேருக்கு – நபர் ஒருவருக்கு 5 கிலோ அரிசியும் போர்வையும் வழங்கினார். நிகழ்வில் சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தென் மாவட்டங்களில் கனமழை:

# ஆவின் பால் தட்டுப்பாடின்றிக் கிடைக்க நடவடிக்கை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.18-

தென் மாவட்டங்களில் கனமழைக் காலத்திலும் முன்னெச்சரிக்கையாக ஆவின் பால் தடையின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

தென் மாவட்டங்களில் தொடர் கனமழை பெய்து வரும் நிலையில் பொதுமக்களுக்கு பால் தட்டுப்பாடு இன்றிக் கிடைக்க ஆவின் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தூத்துக்குடி, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் கன மழை பெய்து வருவதையொட்டி இம்மாவட்டங்களில் போதிய அளவு ஆவின் பால் பொதுமக்களுக்கு கிடைக்க ஆவின் நிறுவனம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஆவின் நிறுவனம் பேரிடர் காலங்களில் பொதுமக்களின் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வெளி மாவட்டங்களில் இருந்து கூடுதலாகப் பால், பால் பவுடர் மற்றும் நீண்ட நாள் உபயோகப்படுத்தக் கூடிய (UHT) பதப்படுத்தப்பட்ட பால் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பொதுமக்களுக்கு தங்குதடையின்றி பால் கிடைக்க போதுமான அளவு கையிருப்பு உள்ளது. மக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை என்று ஆவின் நிறுவனம் தெரிவித்துக்கொள்கிறது.

## இரா.லட்சுமணன் - எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் பங்கேற்பு! ஆர்.கே.நகரில்

# மாற்றுத் திறனாளிகள் 400 பேருக்கு நிவாரண உதவிகள்!

## ஜே.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

ென்னை, டிச. 18 -

ஆர்.கே.நகரில் மாற்றுத் திறனாளிகள் 400 நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் இரா. லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் பங்கேற்றனர்.

மிக் ஜாம் புயலினால் பாதிக்கப்பட்டு ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாற்றுத் திறனாளிகள் 400 நபர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர் நிவாரணப் பொருட்களை வழங்கினார். இதில் பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா. லட்சுமணன்,எஸ்.ஜெபதாஸ் பாண்டியன். மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா, இர. பொன் இளவரசன், ப.குமார் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சங்கத்தை சார்ந்தவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மிக்ஜாம்’ புயலால் பாதிக்கப்பட்ட

# ஆவடி தொகுதி மக்களுக்கு ரூ.6000 நிவாரணம்!

## சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

‘திருவள்ளூர், டிச. 18

ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் 24, 22, 18, 14, 15, 16, 17, 12, 13, ஆகிய வார்டுகள் திருமுல்லைவாயல் 28வது வார்டுக்குட்பட்ட நியாய விலை கடையில் நிவாரணத் தொகையை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர், மாநகர செயலாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் பேபி சேகர், மாமன்ற உறுப்பினர் மாலா பிரகாஷ், துணை தலைவர் சரளா நாகராஜ் சசிகலா ஜீவானந்தம், ஜெ. அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், சாந்திபாபு, ஸ்ரீதேவி, சந்தோஷ், விஸ்வநாதன், ரவி, பாபு, குணசேகரன், பி.எல். ஆர்.யோகா, ரவிச்சந்திரன், கருணாநிதி, முரளி, பாஸ்கர், செந்தில் வேலு, மகேஷ்குமார், மாதவன், மேகனதன், பிரகாஷ், அசோக்குமார், சதாசிவம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கலைஞர் நகர் - 138வது வார்டு - எஸ்.எம்.நகரில் -

# 1800 பேருக்கு நிவாரண உதவிகள்!

# தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. வழங்கினார்!

## கே.கண்ணன் எம்.சி. தலைமை -

## ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. - க.தனசேகரன் முன்னிலை!

சென்னை, டிச. 18-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அடையாறு ஆற்றோர அன்னைசத்யா நகர், எஸ்.எம்.பிளாக் பகுதி எளிய மக்கள் 1800 பேருக்கு, பகுதி செயலாளர், 138வது வார்டு கவுன்சிலர் கே.கண்ணன் தலைமையில் 5கிலோ அரிசியை, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.வி.எம்.பிரபாகர்ராஜா, கணக்கு நிலைகுழு தலைவர் க.தனசேகரன் முன்னிலையில், தமிழச்சிதங்கபாண்டியன் எம்.பி. வழங்கினார்.

இதில் மாவட்ட துணை செயலாளர் வாசுகிபாண்டியன், பகுதி நிர்வாகிகள் எஸ். உமாபதி, அஜந்தாரவி, வட்ட செயலாளர்கள் மு. அன்பழகன், சோ.செந்தி ல்குமார், இரா.செழியன், பூக்கடை ஆர்.பழனிச்சாமி, பிகே.குமார், சதீஷ்கண்ணன், தொண்டரணி மாவட்ட அமைப்பாளர் தம்பி ஆர்.சசிகுமார், மாவட்ட மகளீரணி அமைப்பாளர் சகோதரி கனிமொழிதனசேகரன், கருப்புசாமி, விநாயகம், பச்சையப்பன், சபரி,மகேந்திரன், பாலா, பொன்னுரங்கம், சமையன், பாபு, ரமேஷ், அமுல்ராஜ், ராஜி, கமலக்கண்ணன், சுதா, ஏழுமலை, குமார், ஜெய், கோபி, மணி சீனு, தேவா, கோபி, கந்தன், அனீஷ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் அருவிகளில் கடும் வெள்ளப்பெருக்கு!

தென்காசி, டிச.18-

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சியின் காரணமாக கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. தென்காசி மாவட்டத்தில் நேற்று காலை முதல் பரவலாக மழை பெய்ய தொடங்கிய நிலையில் குற்றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங்கியது.

இருப்பினும் பெரிய வெள்ளம் ஏற்படாததால் காலை 10 மணி வரையில் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் ‘அனை வரும் அருவிகளில் குளிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்பு மழைப் பொழிவு தொடர்ந்து அதிகரித்ததால் மெயின் அருவி, பழைய குற்றாலம், ஐந்தருவியில் காட்டாற்று வெள்ளத்தால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

ஐந்தருவியில் அனைத்து கிளைகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. பழைய குற்றாலத்தி லும் வெள்ளப் பெருக்கு மற்றும் மெயின் அருவியில் பாது காப்பு வளைவை தாண்டி பெரு வெள்ளம் ஏற்பட்ட தால் சுற்றுலா பயணிகள், ஐயப்ப பக்தர்களுக்கு உடனடியாக குளிக்க தடை விதிக்கப்பட்டது. மேலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


